**முதன்மை மாவட்ட நீதிமன்றம், சிவகங்கை.**

**OS.No - 41/2022**

Date: 29.01.2026 PW. 1 (சக்கரைமுகமது த/பெ.செல்லக்கண்ணுராவுத்தர்)

**பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணை தொடர்ச்சி :**

என் பிராதில் தாவா சொத்துக்ளை வாய்மொழியாக Hiba கொடுத்துள்ளதாக சொல்லியுள்ளேனா என்றால் சரிதான். வா.சா.ஆ 7 ஆவணத்தின் படி அப்துல்கரீம் என்பவர் 12.08.2002 ல் Hiba அத்தாட்சி பதிவு செய்யப்படாத ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.7 ஆவணம் 14.08.2002 ல் நோட்டரி பப்ளிக் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டுள்ளதாக என்றால் சரிதான். Hiba கொடுத்துள்ளதாக சொல்லியுள்ளேனா என்றால் சரிதான். வா.சா.ஆ 8 ஆவணத்தின் படி இதயத்துல்லா என்பவர் 14.08.2002 ல் Hiba அத்தாட்சி பதிவு செய்யப்படாத ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ 7 மற்றும் 8 ஆகிய இரண்டு ஆவணங்களும் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி இரண்டு Hiba அத்தாட்சிகளும் எழுதிக்கொடுத்ததாக சொல்லப்படும் காலத்தில் நான் வெளிநாட்டில் இருந்தேன். மேற்படி Hiba அத்தாட்சிகளையும் தயாரித்தாக சொல்லப்படுபவர் புதுக்கோட்டையைச் சேர்ந்த முகமது சிராஜூதீன் என்ற வழக்கறிஞர் என்றால் சரிதான். மேற்படி வழக்கறிஞர் தான் தாவா சொத்துக்கள் சம்பந்தமாக 20.08.2002 ல் சட்ட கருத்து (Opinion) கொடுத்துள்ளார் என்றால் சரிதான். நான் தாவா சொத்துக்களை வங்கியில் அடமானமா காண்பித்து கடன் பெற வேண்டும் என்பதற்காக மேற்படி வா.சா.7, 8 Hiba அத்தாட்சிகள் எழுதப்படவில்லை என்றால் சரிதான். Hiba அத்தாட்சிகளை பதிவு செய்து கொடுத்தால் தான் வங்கியிலிருந்து எனக்கு கடன் கொடுப்பதாக கூறி வங்கியில் மறுத்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. அதனால் Hiba அத்தாட்சிகளை பதிவு செய்து தருமாறு 1 மற்றும் 2 பிரதிவாதிகளிடம் நான் கேட்டேன் என்றால் கடனுக்காக Hiba பதிவு செய்து தருமாறு கேட்கவில்லை ஆனால் Hiba அத்தாட்சி எனக்கு பதிவு செய்து தருமாறு 1 மற்றும் 2 பிரதிவாதியிடம் கேட்டேன். ஒரு Hiba முழுமையடைய வேண்டுமென்றால் கொடுத்தல், ஒப்படைத்தல், ஏற்றுக்கொள்ளுதல் ஆகிய மூன்றும் ஒருங்கே அமையவேண்டும் என்றால் சரிதான். ஒரு Hiba என்பது பதிவு சட்டப்படியும் முகமதிய சட்டப்படியும் கண்டிப்பாக பதிவு

செய்யப்படவேண்டும் என்றால் அந்த சமயத்தில் எனக்கு வழக்கறிஞர் கொடுத்த கருத்துப்படி சரியல்ல. தாவா சொத்துக்களை 1 மற்றும் 2 பிரதிவாதிகள் எனக்கு Hiba கொடுக்கவே இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் குறித்த 1, 2 பிரதிவாதிகள் பெயரில் இருந்த பட்டா என் பெயரில் மாற்றம் செய்வதற்கு முன் அவர்களுக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டதா என்றால் எனக்கு தெரியாது. 1, 2 பிரதிவாதிகளின் தந்தை தான் அந்த பட்டாவை எனக்கு மாற்றி கொடுத்தார்கள். அதன் பின்பு தேவகோட்டை கோட்டாச்சியர் அலுவலகத்தில் 1, 2 பிரதிவாதிகள் மனு கொடுத்து எனது பெயரில் இருந்த பட்டா ரத்து செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. RTO போட்ட உத்தரவின் மீது DRO நீதிமன்றத்தில் நான் மேல்முறையீடு செய்தேன் என்றால் சரிதான். அங்கு எனக்கு சாதகமாக உத்தரவு போடப்பட்டது என்றால் சரிதான். அந்த உத்தரவை எதிர்த்து 1, 2 பிரதிவாதிகள் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் Writ தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான். அந்த Writ மனுவில் 1, 2 பிரதிவாதிகளுக்கு எதிராக உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த உத்தரவின் மீது 1, 2 பிரதிவாதிகள் மேல்முறையீடு செய்தார்கள் என்றால் சரிதான். அந்த மேல்முறையீட்டில் எனக்கு வழங்கப்பட்ட பட்டாவை ரத்து செய்து மீண்டும் ஏற்கனவே இருந்தது போல 1, 2 பிரதிவாதிகளின் பெயரில் பட்டா போட உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரியல்ல. அது என் தரப்பில் வா.சா.ஆ.23 ஆக குறியீடு செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி Writ Appeal என்னை தான் சொத்து சம்பந்தமாக உரிமையை நீதிமன்றத்தில் நிலைநாட்டுமாறு கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் நான் என் பிராதிலும் நிரூபண வாக்குமூலத்திலும் 1, 2 பிரதிவாதிகள் நீதிமன்றம் மூலமாக உரிமையை நிலைநாட்டுமாறு கூறியுள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்துககளை பட்டா மாற்றம் செய்ய 1, 2 பிரதிவாதிகளின் தந்தை எனக்கு உதவியாக இருந்ததாக நான் பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரிதான். தற்போது மேற்படி தாவா சொத்துக்களை நான் அனுபவம் செய்வதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் ஏற்கனவே அனுபத்து வந்ததை 1, 2 பிரதிவாதிகள் அபகரித்து விட்டார்கள். தாவா சொத்துக்களில் 2, 3 இலக்க சொத்துக்களில் வீடு உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் காலி இடமாக உள்ளது என்று நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்துக்களை நான் எந்த காலத்திலும் அனுபவிக்கவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை சுற்றி முள் வேலிகள் 1,

2 பிரதிவாதிகளால் போடப்பட்டது என்றால் சரியல்ல. எனக்கு பாத்தியமில்லாத சொத்தை நான் என் தகப்பனாருக்கு தானசெட்டில்மெண்ட எழுதி கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் தகப்பனாருக்கு தானசெட்டில்மெண்ட் எழுதி கொடுத்தது 1, 2 பிரதிவாதிகளுக்கு தெரியாது என்றால் சரிதான். அவர்களுக்கு தெரிய வாய்ப்பில்லை. தற்போது என் தந்தை 2ம் வாதி இறந்துவிட்டார் என்றால் சரிதான். என் அப்பாவின் வாரிசுகளை சேர்க்க கோரி மனுதாக்கல் செய்து பிராதில் திருத்தம் செய்து பெயர் சேர்த்தேன் என்றால் சரிதான். என் அப்பா இறந்த பிறகு அனைத்து வாரிசுகளையும் நான் சேர்த்துள்ளதால் அவர்களுக்குரிய பரிகாரம் குறித்து நான் பிராதில் திருத்தம் செய்யவில்லை என்றால் சரிதான். ரிட் மேல்முறையீட்டில் நிலம் சம்பந்மாக விற்பனை, பரிசு, அடமானம் போன்றவை பதிவு துறையினால் பதிவு செய்யப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் நான் உத்தரவை படித்துப்பார்க்கவில்லை. மேற்படி வ.சா.ஆ.23 உத்தரவுக்கு பின்னர் 1, 2 மற்றும் 3, 4 பிரதிவாதிகளின் பெயரில் பட்டா உள்ளது என்றால் சரிதான். 2, 3 இலக்க சொத்துக்களுக்கு 4ம் பிரதிவாதி அழகுமீனாள் பெயரில் பட்டா உள்ளது என்றால் சரிதான். 1வது இலக்கச் சொத்துக்கு 3ம் பிரதிவாதி அரசகுமார் பெயரில் பட்டா உள்ளது என்றால் சரிதான். 1, 2 பிரதிவாதிகளின் பெயரில் பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணங்கள் சித்திக்ராஜ் என்பவரிடம் கொடுக்கப்பட்டு காணாமல் போய்விட்டது என்றால் சரியல்ல. சித்திக்ராஜ் என்பவருக்கு அடமானம் கொடுக்கப்பட்டதை இசியை பார்த்து தெரிந்துகொண்டேன் அசல் ஆவணங்கள் என்னிடம் தான் உள்ளது. என் அப்பா பெயரில் நான் அதை எழுதிவைத்துவிட்டேன். சித்திக்ராஜ் எனது உறவினர் என்றால் சரிதான். என் சகலை தான். அவரிடம் இருந்து அசல் ஆவணங்களை எடுத்து வந்தேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் hiba மூலம் என்னிடம் கொடுக்கப்படவில்லை என்றாலும என் வசம் ஒப்படைக்கடவில்லை என்றாலும் சரியல்ல. எனக்கு கொடுக்கப்பட்டதாக சொல்லப்படும் hiba சட்டப்படி செல்லதக்கது என்ற பரிகாரத்தை நான் இந்த பிராதில் கேட்கவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் பிரதிவாதிகளால் போடப்பட்ட எதிர் வழக்குரையை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்துபார்த்தேன். மேற்படி அந்த எதிர் வழக்குரையில் para 8ல் hiba செல்லதக்கது என்ற பரிகாரம் எதும் தாவா வழக்கில் கோரவில்லை என்று குறிபிடப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றும் அதில் எனக்கு எந்த வித அனுபவமோ, பாத்தியமோ, உரிமையோ இல்லை என்றால் சரியல்ல.

**அதனால் நான் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.**

**மறுவிசாரணை** : இல்லை.

சாட்சி சொல்லியபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, திறந்த நீதிமன்றத்தில் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, கையொப்பமிடப்பட்டுள்ளது.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.01.29 17:04:42 +0530

**முதன்மை மாவட்ட நீதிபதி,**
**சிவகங்கை.**